**உத்தரவாதத்தின் நோக்கெல்லையும் காலப்பகுதியும்**

01. இதன் கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற நடமாடும் சாதனமானது (''கருவி'') அடிப்படையிலும் தொழில் முறையின் கீழும் சாதாரண பாவனைக்காகவும் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒருவருட (01) காலத்திற்கான (''உத்தரவாதக் காலப்பகுதி'') உத்தரவாதத்தினை (''மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தினை'') சேவை தொடர்பில் மூலக் கொள்வனவாளருக்கு (''வாடிக்கையாளர்'') டயலொக் அக்சியாடா நிறுவனமானது **[PQ 38]** (''டயலொக் நிறுவனம்'') வழங்குகின்றது. இந்த உத்தரவாதக் காலப்பகுதிக்குள் குறித்த கருவியை ஒன்றில் திருத்தி அல்லது பதிலீடு செய்வது டயலொக் நிறுவனத்தினுடைய விருப்பத்தெரிவின் அடிப்படையில் கட்டணம் எதுவும் அறவிடப்படாமல் சேவை வழங்கப்படும். ஆயினும் குறித்த மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாத நிபந்தனைகளுடன் இணங்கியதாக டயலொக் தொழில்நுட்ப உதவி அமைவிடங்களில் குறித்த கருவியானது ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அமைவிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழேதரப்பட்டுள்ளன.

02. மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தில் குறிப்பிட்டு மாறாகசொல்லப்பட்டிருக்காத வேளையில் இந்த உத்தரவாதமானது இலங்கைக்குள் மாத்திரம் வலிதுடையதாகும்.

03. குறிப்பிட்ட கருவியினுடைய சேவை தொடர்பில் (திருத்தங்கள், பதிலீடுகள், குறைபாடுகள் என்பன) டயலொக் நிறுவனத்தால் செய்யப்படுகின்ற தீர்மானங்களும் இறுதியானதாகும் என்பதுடன் அத்தகைய தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதற்கு வாடிக்கையாளர் உடன்படுகிறார். குறைபாடுடைய கருவியானது அல்லது அதன் ஏதேனும் பாகமானது இதன்படி பதிலீடு செய்யப்படுகின்ற போது கருவியானது அல்லது அதன் ஏதேனும் பாகமானது டயலொக் நிறுவனத்தின் சொந்தமாகமாறும்.

04. குறித்த கருவியுடன் பொருத்தப்பட்டுள்ள அல்லது சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது குறித்த கருவியின் செயற்பாட்டிற்கான ஏதேனும் துணைக் கருவியானது டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்படாதவிடத்து ஏதேனும் துணைக்கருவி தொடர்பில் டயலொக் நிறுவனமானது பொறுப்புடமையினை ஏற்றுக்கொள்ளமாட்டாது.

05. வரையறுக்கப்பட்ட இந்த உத்தரவாதமானது பின்வருவனவற்றை உள்ளடக்கமாட்டாது.

    5.1 குறித்த கருவியானது டயலொக் நிறுவனத்திடம் இருந்து அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் அல்லது விற்பனையாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருக்காதபோது,

5.2 ஏற்பட்டுள்ள குறைபாடானது தவறான கையாள்கை, அசாதாரண பாவனை, அசாதாரண நிலைமை, முறையற்ற களஞ்சியப்படுத்தல், ஈரத்தன்மை, திரவம் அல்லது ஈரத்தோய்வு, அரிப்பு, துருப்பிடித்தல் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுதல், மிகையான வெப்பநிலைக்கு உட்படுத்தப்படுதல், மணல், தூசு, அழுக்கு, வேறுமாசு அல்லது வேறுசுற்றாடல் நிலைகள், மூன்றாம் தரப்பினால் செய்யப்படும் திருத்தம் தொடர்பான ஏதேனும் முறையற்ற பயனுறுநிலை இணைப்புக்களின் பாவனை போன்றதான, பாவனைக்கான அறிவுறுத்தல் குறிப்பில் கூறப்பட்டுள்ள முறையான பிரயோக அறிவுறுத்தல்கள் அல்லது முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றதவறுதல், தவறானபாவனை, கவனயீனம், துஷ்பிரயோகம், விபத்து, மாற்றுகை, பிரிப்பு, கடவுளின் செயல்கள், உணவு அல்லது திரவம் சிதறுதல், நேரடியாக மூலப்பொருள் அல்லது வேலைத்திறன் மற்றும் கருவியின் சாதாரண தேய்மானம் என்பவற்றின் குறைபாட்டின் காரணமாக ஏற்படுத்தப்படாதவரை நுகர் பொருட்களான உருகிகளின் வினைதிறனற்றதன்மை மற்றும் அலைக்கம்பம் சேதமடைதல் அல்லது தொடர்பறுதல் உள்ளடங்கலான டயலொக் நிறுவனத்தின் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பால் வாடிக்கையாளரின் கட்டுப்பாடு அல்லது வேறுசெயல்களால் ஏற்படும் பொருத்தக்கேடு,

5.3 குறிப்பிட்ட சாதனத்தை அடையாளம் காண்பதனை கடினமாக்குகின்ற வகையிலே சாதனத்தின் தொடர் எண் நீக்கப்பட்டு, உருக்குலைக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டிருப்பின்,

5.4 சாதனத்தின் முறையற்ற சோதனை, பிரயோகம், பராமரிப்பு, பயனுறுநிலை இணைப்பு **(Installation**) அல்லது ஏதேனும் மாற்றீடு, அல்லது மெருகூட்டுகை.

5.5 இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தினைப் பாதிக்கக் கூடிய வகையிலான, கொள்வனவு இடம்பெற்ற திகதி, மாதம், வருடம், வாடிக்கையாளரின் பெயர், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது பகிர்ந்தளித்தோனின் பெயர் மற்றும் தொடர் எண் ஆகியன தொடர்பிலான ஏதேனும் மாற்றங்கள்,

5.6 கூறப்பட்ட சாதனத்தின் குறைபாடு அல்லது பழுது, உத்தரவாதக் காலப்பகுதிக்குள் வாடிக்கையாளரால் டயலொக் நிறுவனத்திற்கு அறியப்படுத்தப்படாதவிடத்து,

5.7 குறிப்பிட்ட சாதனமானது டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்பாத வேறொரு துணைக்கருவியுடன் இணைத்துப் பாவிக்கப்பட்டிருப்பின் அல்லது நியாயமாகக் கருதப்பட்ட நோக்கங்களைவிட வேறுநோக்கங்களுக்காகப் பாவிக்கப்பட்டிருப்பின்,

5.8 வாடிக்கையாளரின் சாதாரண பாவனையின் போது பிளாஸ்டிக் மேற்பரப்பு மற்றும் வெளிவாரியாக அணுகக்கூடிய பாகங்களில் கீறல்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டிருப்பின்,

5.9 சாதனத்துடன் அளிக்கப்பட்ட மென்பொருள்,

5.10 இந்த உத்தரவாதச் சான்றிதழானது சாதனத்துடன் இணைத்துக் கையளிக்கப்படாத போது, அனைத்து விதமான சேதங்களுக்கும் செலவாகிய பணம் (துணைப் பாகங்களுக்கான செலவு, பராமரிப்புப் செலவு, விநியோகச் செலவு என்ற மட்டுப்பாடுகளின்றி) வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

06. இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதமானது கீழ்வரும் சந்தர்ப்பங்களில் வலிதற்றதாக் கப்படும்.

6.1 சாதனத்திலுள்ள அல்லது துணைச் சாதனங்களிலுள்ள தொடர் இலக்கம் அல்லது ஏதேனும் முத்திரை மாற்றப்பட்டு அல்லது உருக்குலைக்கப்பட்டு அல்லது சான்றானது சேதப்படுத்தப்பட்டிருப்பின்,

6.2 குறிக்கப்பட்ட சாதனத்தினை தவிர்ந்த வேறு சாதனத்துடன் அல்லது சேவைக்காக துணைச் சாதனங்களானவை பாவிக்கப்பட்டவை,

6.3 டயலொக் நிறுவனத்தின் எழுத்து மூலமானமுன் சம்மதமின்றி இவ் வரையறுக்கப்பட்ட உத்தரவாதமானது எவ்வழியிலேனும் மாற்றப்பட்டிருப்பின் அல்லது மெருகூட்டப்பட்டிருப்பின்,

7. இவ் வரையறுக்கப்பட்ட உத்தரவாதமானது டயலொக் கம்பனியினால் வாடிக்கையாளருக்கு மட்டுமே நீடிக்கப்படும் என்பதுடன் அடுத்துவருகின்ற வாடிக்கையாளர் அல்லது கொள்வனவாளருக்கு நீடிக்கப்படமாட்டாது.

8. இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதமானது சாதனம் தொடர்பான டயலொக் நிறுவனத்தின் பொறுப்புக்களைத் தெளிவுபடுத்துகின்றது.

9. ஏற்புடையதாகின்ற சட்டத்தினால் அனுமதிக்கப்படுகின்ற அளவு, இவ் வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தில் கூறப்பட்டுள்ள நிவாரணங்கள் வாடிக்கையாளரின் தனியானதும், பிரத்தியேகமானதும் ஆகும்.

10. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் டயலொக் நிறுவனமானது, சாதனத்தினை குறிப்பிட்ட கொள்விலைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்தமைக்கான நட்டம், பாவனைக்கான நட்டம், நேரநட்டம், தரவுநட்டம், வசதியீனம், வர்த்தக நட்டம், சேமிப்பு அல்லது இலாபத்திற்கான நட்டம், வேறு சம்பவ, மறைமுக அல்லது விசேட அல்லது விளைவு நட்டங்கள் (எதிர்பார்த்த நன்மைகள் அல்லது இலாபத்திற்கான நட்டம் உட்பட)

என்பவற்றிற்கு பொறுப்பாகாது. இச்சாதனத்தை சுமந்துசெல்பவரின் தொலைவெல்லை, முழுத்தழுவு அளவு, வடிவமைப்பு, சேவைதரம், ஒலிதரம், உபகரணப் பொருத்தப்பாடு, தொலைத்தொடர்பு முறைமை செயலற்றிருக்கும் நிலைமை அல்லது கட்டண நடைமுறைகள் தொடர்பாக எந்த உத்தரவாதமும் செய்யப்படவில்லை என்பதுடன் டயலொக் நிறுவனம் இது தொடர்பான கடப்பாடு, பொறுப்புடைமை தனக்கு இல்லையென ஊகிக்கும். வெளியமைப்பு மற்றும் அழகுக்கான பாகங்கள் வேலைத்திறனின் போது குறைபாடுகளற்று காணப்பட்டதால் இவ் உத்தரவாத வாசகங்களால் ஆளப்படமாட்டாது.

11. குறிப்பிட்ட நோக்கத்திற்காக இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதக் காலப்பகுதியில் இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதமானது ஏனைய அனைத்து வெளிப்படையான உத்தரவாதங்கள் மற்றும் ஏனைய உட்கிடையான உத்தரவாதங்களுக்கான மட்டுப்பாடுகளற்ற நிபந்தனைகள் உள்ளடங்கலாக உற்பத்தித்தரம் மற்றும் பொருத்தம் போன்ற நிபந்தனைகளுக்கு நிகரானதாகக் கருதப்படும். மேற்கூறப்பட்ட முறைகளிலல்லாத முறிவிற்கான கடப்பாடு தனக்கில்லையென டயலொக் நிறுவனம் ஊகிக்கும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் டயலொக் நிறுவனமானது பின்விளைவான நட்டம் அல்லது சாதனத்தின் விளைவாக உருவான பாவனை நட்டம் அல்லது இலாப நட்டம் உள்ளடங்கலான நட்டம் என்பவற்றிற்கு சட்டத்தின் மூலமாகக் கோரக்கூடிய அளவிற்கு டயலொக் பொறுப்பாக்கப் படமாட்டாது.

12. இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தினைத் தவிர வேறு எந்த உத்தரவாதமும் (வெளிப்படையான அல்லது உட்கிடையான) அல்லது சாதனம் தொடர்பாக வேறு திறத்தவரால் வழங்கப்படுகின்ற கட்டுறுத்தும் டயலொக் நிறுவனத்தினைப் பிணிக்காது.

13. சாதனத்தினை அல்லது துணைச் சாதனங்களை மீளொப்படைப்பதற்கான அனைத்துச் செலவுகளுக்கும் வாடிக்கையாளர் பொறுப்பாவார்.

14. இந்தச் சாதனமானது உத்தரவாதக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ஏதேனுமொரு டயலொக் தொழில்நுட்ப உதவி அமையத்திற்கு மீளொப்படைக்கப்படுமாயின் டயலொக் நிறுவனத்தின் சாதாரண சேவை கொள்கைகள் ஏற்புடையதாகும் என்பதுடன் அதற்கேற்ப வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படும்.

    14.1 இந்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்திலே வெளிப்படையாகக் கூறப்பட்டதற்கு அப்பால் தனக்கு கடப்பாடு அல்லது பொறுப்புடைமை இருப்பதாக டயலொக் நிறுவனம் கருதமாட்டாது.

14.2 உத்தரவாதம் பற்றிய தகவல்கள், உபகரணத்தின் அம்சங்கள் மற்றும் குறித்துரைப்புக்கள் என்பன முன்னறிவித்தலின்றி மாற்றத்திற்கு உட்படலாம்.

15. டயலொக் நிறுவனமானது வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ கருவிகளின் எந்தவொரு உள்ளடக்கம் பற்றிய கூற்றுக்களையோ உத்தரவாதங்களையோ வழங்காது.

16 உதிரிப்பாகங்கள்:

16.1 வாடிக்கையாளரால் கொள்வனவு செய்யப்பட்ட மின்கலம் மற்றும் மின்செறிவூட்டியுடன் இணைக்கப்பட்ட மூலக்கருவியானது (சாதனத்துடன் இணைத்து) விற்பனை செய்யப்பட்ட திலிருந்து ஆறு மாத காலத்திற்கு பாவனைத்திறன் மற்றும் மூலப்பொருள் மீதான கோளாறுகள் காணப்படின் சாதனத்தினை கொள்வனவு செய்த திகதியிலிருந்து 6 மாதகாலத்தினுள் மீள ஒப்படைத்தல் வேண்டும்.

16.2 வாடிக்கையாளரால் கொள்வனவு செய்யப்பட்ட கையடக்க உபகரணத் தொகுதி (தனியான பாகங்கள்) அல்லது வாடிக்கையாளரால் கொள்வனவு செய்யப்பட்ட இணைக்கப்பட்ட கருவி தொடர்பில் விற்பனையில் இருந்துபதினான்கு நாட்களிற்கு பாவனைத்திறன் மற்றும் மூலப்பொருள் மீதான ஏதேனும் கோளாறுகள் காணப்படின் சாதனத்தினை கொள்வனவு செய்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மீள ஒப்படைத்தல் வேண்டும். சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட்ட உதிரிப்பாகங்கள் தவிர ஏனையவை இவ் உத்தரவாதத்திற்கு உட்படமாட்டாது.

16.3 மாற்றீடு செய்யப்படுகின்ற சாதனங்களின் உத்தரவாதக் காலப்பகுதியானது, முதல் சாதனத்திற்கு வழங்கப்பட்ட உத்தரவாதக் காலப்பகுதியல் மீதமாக எஞ்சியிருக்கும் காலப்பகுதியின் அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

****************